பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
22 12 2024 **SUNDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. குவைத் நாட்டின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. கூட்டுறவுத்துறை மூலம் நாட்டு மக்கள் வளம்பெற வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளதாக திமுக கூறியுள்ளது.

4. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடன்சுமை அதிகரித்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Lamabam Nilam Devi** மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

>>>>>><<<<<<

குவைத் நாட்டின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசு முறைப் பயணமாக குவைத் சென்றுள்ள பிரதமருக்கு அந்நாட்டு அரசர் இந்த விருதினை வழங்கினார்.

உலக அளவில் சிறந்த நிர்வாகத் திறன் பெற்றவர் மட்டுமின்றி, வளைகுடா நாடுகளின் நல்லுறவுக்காக ஆற்றிய பங்களிப்பிற்காகவும் பிரதமருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

கூட்டுறவுத்துறை மூலம் நாட்டு மக்கள் வளம்பெற வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

அகர்தலாவில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதன் அடிப்படையில் தான் கூட்டுறவுத் துறைக்கென தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசு திட்டங்களின் பலன்கள் அனைவருக்கும் சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

22 12 2024 6 30 ஸ்டாலின்-வாக்குறுதி

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றியிருப்பதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற திமுக செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் செயல்படுத்தி வரும் மக்கள் நல திட்டங்களை பட்டியலிட்டார்.

கோவிட், மழை வெள்ள பாதிப்பு என பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொண்டு இந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

திமுக தலைமையிலான கூட்டணி, கொள்கை அடிப்படையிலானது என்றும் திரு. மு.க.ஸ்டாலின் கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடன்சுமை அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகம் தற்போது எட்டரை லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கடனில் உள்ளதாக கூறியுள்ளார்.

கடன் வாங்குவதற்கான தொகை அதற்கான நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை என்று தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாவட்ட கல்வி அலுவலகங்களில் இணையதள இணைப்புக்கான கட்டணம் பல மாதங்களாக செலுத்தப்படவில்லை என்றும், இதன் காரணமாக இணைப்பு துண்டிக்கப்ப்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அன்றாட செலவுகளுக்கே கடன் வாங்கும் நிலையில் தமிழக அரசு உள்ளது என்றால், இதுகுறித்து முதலமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

ஆன்லைன் சூதாட்டத்திற்கு உச்சநீதிமன்றத்தின் மூலம் தடை பெற, தேவையான நடவடிக்கைகளை திமுக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பிரச்சினை தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வழக்கை விரைவாக விசாரணைக்கு கொண்டுவர, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்துவதை தடுத்து நிறுத்த தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில், நாகையைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கை கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதித்துள்ளதாகவும் திரு. முத்தரசன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மத்திய அரசு எவ்வித பாரபட்சமும் இன்றி மாநில அரசுகளுக்கு நிதி உதவிகளையும், திட்டங்களையும் வழங்கி வருவதாக அமமுக பொதுச்செயலாளர் திரு. டிடி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

திருவண்ணமலையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்திற்கு போதிய நிதியை மத்திய அரசு வழங்கி வருவதாக தெரிவித்தார்.

மத்திய அரசு வழங்கும் நிதியை தமிழக அரசு எவ்வித முறைகேடும் இன்றி முறையாக பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மக்கள் நலனுக்காக தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்தியதன் காரணமாக, பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் நடைமுறை வரவேற்கத்தக்கது என்றும் திரு. டிடி.வி. தினகரன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்திய கிரிக்கெட் அணிக்கு அஷ்வின் அளித்த பங்கு மிக சிறப்பானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள அஸ்வினுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

பந்து வீச்சில் பல புதுமைகளை புகுத்தியவர் அஸ்வின் என்றும் அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

765 விக்கெட்டுகளை வீழ்த்தியது அவரது சாதனையை எடுத்துரைப்பதாக உள்ளது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இந்திய அணியின் வெற்றிக்காக முக்கியமான தருணங்களில் சிறப்பாக செயல்பட்டவர் அஸ்வின் என்றும் திரு. நரேந்திர மோடி அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 50 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் தர நிர்ணய ஆலோசகர், பல் மருத்துவ உதவியாளர், இடைநிலை சுகாதாரப் பணியாளர் ஆகிய பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்தவர்கள், வரும் 24ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. அருணா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

தொடர் விடுமுறையை அடுத்து, கன்னியாகுமரிக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

>>>>>><<<<<<

கடலூர் மாவட்டம், திட்டக்குடி அருகே நேரிட்ட சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்தார், 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

>>>>>><<<<<<

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119 புள்ளி இரண்டு அடியாக உயர்ந்துள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

சென்னை சென்ட்ரலிலிருந்து ஹவுராவிற்கு இன்றிரவு 7 மணிக்கு புறப்பட வேண்டிய விரைவு ரயில், மணி 8.30க்கு புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Lamabam Nilam Devi** மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் மகளிர் 55 கிலோ எடைப்பிரிவில் அவர், இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

**>>>>>><<<<<<**

மும்பையில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Anahat Singh** பட்டம் வென்றார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-8, 11-8, 11-8 என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Akanksha Salunkhe**–யை வென்றார்.

**>>>>>><<<<<<**

இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 315 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் வெஸ்ட் இன்டீஸ் சற்றுமுன்வரை 13 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 34 ரன் எடுத்துள்ளது.

வதோதராவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற வெஸ்ட் இன்டீஸ் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து, பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 314 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Smriti Mandhana** 91 ரன் எடுத்தார்.

**>>>>>><<<<<<**

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மகளிர் கிரிக்கெட் கோப்பையை இந்தியா வென்றுள்ளது.

கோலாலம்பூரில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா 41 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்ற பங்களாதேஷ் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிறகு 117 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக, **Gongadi Trisha** 52 ரன் எடுத்தார்.

118 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த பங்களாதேஷ், தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, 18 புள்ளி மூன்று ஓவரில் 76 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

**Aayushi Shukla** மூன்று விக்கெட்டுகளையும், **Parunika Sisodia** மற்றும் **‘Sonam Yadav** தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

**>>>>>><<<<<<**

மும்பையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Riya Bhatia – Zeel Desai** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

**>>>>>>END<<<<<<**